NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p4
**Date:** 21 January 2021

# ‘தலைவர்கள் துணிச்சலாக செயல்பட வேண்டும்’

உலகில் தற்போது நிலவும் நிச்சயமற்ற, தெளிவற்ற சூழ்நிலையில் தலைவர்கள் தைரியமானவர்களாகவும் மாறுபட்ட வயதினரைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்று மூத்த தூதரான சான் ஹெங் சீ தெரிவித்துள்ளார். தலைமைத்துவம் பற்றிய மெய்நிகர் கருத்தரங்கில் பேசிய பேராசிரியர் சான், கொவிட்-19க்குப் பிந்திய காலத்தில் இத்தகைய பண்புகளை தலைவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தலைமைத்துவம் மிகவும் முக்கியம் என்பதை கிருமிப் பரவல் சூழ்நிலை காட்டுவதாகவும் அவர் கூறினார்.

இந்தக் கருத்தரங்குக்கு கொள்கை ஆய்வுக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

கொள்ளை நோயை நாடுகள் எப்படி கையாண்டன என்பதை தலைமைத்துவம் வெளிப்படுத்துவதாகவும் வெளியுறவு அமைச்சின் பொதுத் தூதருமான சான் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.